# கலைக்கோயில் கட்டினான் இராஜராஜ சோழன்! கல்விக் கோயில் கட்டினார் எங்கள் தளபதி!



தொன்மைச் சிறப்புடைய தூங்கா நகரத்தின்
தோள்களில்
தோற்றப் பொலிவோடு துய்யமணி
மாலையாகச் சேர்ந்து
கண்ணையும் கருத்தையும் கவர்ந்து நிற்கிறது
ஒரு கல்விக்கோயில்!

கலைக்கோயில் மலைக்கோயில் திருக்கோயில்
பலகண்ட தெய்வத் திருநகரில்,
கல்விக் கண்திறக்கும் நிலைக்கோயில் ஒன்று,
நெடுவானக் கதிராக நெஞ்செல்லாம் சுடர்பரப்பி
எழுந்து நிற்பது கண்டு இதயம் பூரிக்கிறது.

'சிந்தையெலாம் கொஞ்சிவரும் செந்தமிழ்ச்
சிரபுஞ்சி'
பேரறிஞர் அண்ணாவின் 102வது
பிறந்தநினத்தை
முன்னிட்டு,
கடந்த 2010ல் முத்தமிழறிஞர் கலைஞர்
சென்னை கோட்டூர்புரத்தில்
அண்ணா நூற்றாண்டு நூலகம் கண்டார்.

நூல்கண்டார் நூலே கண்டார் உள்ளே
நுழைந்தவர் இன்பம் கொண்டார்
மால்கொண்டார் எல்லாம் நூலின்
மலைகண்டார் மலைப்பே கொண்டார் என்று
பத்துலட்சம் நூல்கள் அங்கே அறிதுயில்
கொண்டிருக்க
ஆவன செய்தார் அருந்தமிழ் அறிஞர் கலைஞர்.

அவரின் பிள்ளை
அறிவாலயப் பூங்காவில்
பூத்துச் செழித்துப் புதுமணம் பரப்பிவரும்
முல்லை
எல்லை காணா இன்பப் பெருக்கோடு,
இன்று திறந்திருக்கிறார் கலைஞர் நூற்றாண்டு
நூலகம்!

அன்றுதிறந்தது கோட்டூர் புரத்தில்!
இன்றுதிறந்தது கூடல்மா நகரத்தில்!
அன்று திறந்தது அறிவு நிலா!
இன்று திறந்தது அந்த அறிவின் நிலா!

தஞ்சைத் தரணியில்,
தென்னகத்தின் மேருவெனத் திகழும்படியாய்
கவின்நிறைந்த கலைக்கோயில் கட்டினான்
இராஜராஜ சோழன்.
அவன் பெற்றெடுத்த அரும்பெறற் புதல்வன்
இராஜேந்திர சோழன்
உடல்கடந்து ஊறிய உற்சாகத்தில்
கடல்கடந்து சென்று
வெற்றிக் கொடிநாட்டித்
தந்தையை வென்ற தனயன் ஆனான்.

பொங்கும் புகழோடு
தங்கத் தமிழ்நாட்டைச்
சிங்கம்போல் ஆண்டுவரும் நம் தளபதியார்
தந்தை கலைஞரைச் சிந்தையில் கொண்டு
விந்தை மனிதராய்
விசுவரூபம் எடுத்து
அவரையும் வென்று நிற்கிறார் இன்று.

நூலைப்படி..சங்கத் தமிழ்
நூலைப்படி!
முறைப்படி நூலைப்படி!

காலையிற் படி!
கடும்பகல் படி!
மாலை இரவு பொருள்படும் படி
நூலைப்படி!

கற்பவை கற்கும்படி
வள்ளுவர் சொன்னபடி
கற்கத்தான் வேண்டும் அப்படி
கல்லாதவர் வாழ்வதெப்படி? என்னும்
பாவேந்தர் சொற்படி,

திராவிடன் மாடல் அரசுக்கான
அடிப்படை வாசற்படி
அனைவருக்குமான கல்விதான் என்பதை,
இறுதியானதும் உறுதியானதுமான
இலட்சியமாகக் கொண்ட நம் காவியத் தளபதி,
கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை இன்று
திறந்துவைத்து,

கற்றவர் கல்லாதவர்
கற்கப் போகிறவர் மனமெல்லாம்
மல்லிகைப் பூவாய் மலர்ந்து மணந்து
வானம் அளந்து வாசித்து நிற்கிறார்.

கற்பனைச் சமுத்திரம் தமிழ்க் கடல்மடை
திறந்த வெள்ளம்
கலைஞரின் வார்ப்பான நம் கண்ணியத் தளபதி,
ஆர்ப்புடன் செய்துவரும் அற்புத
அறிவுப்பணிகளில்
தலையாய பணி
நூலறிவு பெறச்செய்யும் இந்த
வாலறிவுப் பணி!



டாக்டர்
எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி.
மேனாள் ஒன்றிய இணை அமைச்சர்

'இது பணியல்ல அறிவுலகத்திற்கான
அணி' என்று
அறிந்து செய்திருக்கும் அருமைத் தலைவர்
நம் தளபதிக்கு
ஆலவாய் அண்ணலின் அருளும்
அறிவுடையார் வாழ்த்தும்
செவ்வறிவுச் செப்பமுடையார் பாராட்டும்
என்றும் வாய்த்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

இனித்,
தூங்கா நகரம்
அறிவுப் பசியெடுத்து
ஏங்கா நகரம் என்று பேசப்படும்!
பூமணக்கும் நகரம் இனி
நூல்மணக்கும் நகரம் என்று போற்றப்படும்!
முத்தமிழ் வளர்ந்த இடம்
மூதறிவாளர்ப் புகுந்த இடமாய்ப் புகழப்படும்!
வித்தகத் தமிழ் விளைந்த இடம் இனிமேல்
புத்தகப் பூக்களின் சோலையாகி விடும்!
அறிவுத் தேடலில் அயர்ந்து போனவர்கள்
கூடிக் களிக்கும் கூடமாகி விடும்
கூடல்மாநகரம்!

எல்லாம் அவன்செயல் என்பதைப்போல
'எல்லாம் இவன்செயல்' என்று
இன்பத் தமிழ்நாட்டின்
இலக்கிய அரசியல் வரலாறு
முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்னும்
காயாத சூரியனை தேயாத சந்திரனைப்
போற்றிப் பரவிப்
புளகாங்கிதம் அடையும்
பொற்காலம் வளரட்டும்!

கலைஞரின் படைப்புகளில்
கவினார்ந்த படைப்பு
கைவண்ணக்
கவியரசர் கலைஞர்
உருவாக்கிய
கவித்துவப் படைப்பு
காப்பத்தில் இருக்கும்போதே
கலைஞர் தமிழ்கேட்டுச்
சிற்பமாய் உருவான
செந்தமிழ்ப் படைப்பு
நம் தளபதியின் சரித்திரப் பதிவுகள்
நீளட்டும்!

திராவிடன் மாடல்
திக்குகள் எட்டையும் ஆளட்டும்!

# முதலீடுகளை ஈர்க்கும் மாநிலமாக தமிழ்நாடு முன்னேற்றம்!

## 'தி வீக்' ஆங்கில இதழுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி!... 5 ஆம் பக்கத் தொடர்ச்சி

**கேள்வி: நீண்ட காலமாகத் தமிழ்நாடு தொழில்துறையில் முன்னோடி மாநிலமாக உள்ளது. தற்போது ஒன்றிய அரசு உட்கட்டமைப்புத் திட்டங்களைப் பெரிய அளவில் முன்னெடுத்து வரும் நிலையில், இதன் அடுத்த கட்ட பாய்ச்சலில் தமிழ்நாடு அங்கம் வகிப்பதை எவ்வாறு உறுதி செய்வீர்கள்?**

**மு.க.ஸ்டாலின் :** தமிழ்நாட்டினை மேலும் வளர்ச்சிப்பாதையில் கொண்டு செல்லவும், மாபெரும் பொருளாதார மாற்றத்தை மக்களுக்கு அளிக்கும் வகையிலும் தமிழ்நாடு அரசு புதிய முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றது. அதன் ஒரு பகுதியாக, வரும் 2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம், தமிழ்நாட்டில் 'உலக முதலீட்டாளர்கள் மாநாடு' ஒன்றை மிகப்பெரிய அளவில் நடத்திடத் திட்டமிட்டு இருக்கிறோம்.

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியை வடிவமைத்திடுவதில் முக்கியப் பங்காற்றிடும் விதமாக, 2030-2031நிதியாண்டிற்குள் ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக மாறுவதற்கான ஒரு இலட்சிய இலக்கினை நிர்ணயித்து, அந்தப் பாதையில் பயணித்து வருகிறோம்.

இந்த இலக்கினை அடைந்திட, 23 இலட்சம் கோடி ரூபாய் முதலீடுகளை ஈர்த்தாக வேண்டும்.

46 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கிடவும் வேண்டும். அதற்கான அனைத்து முயற்சிகளையும் நாங்கள் எடுத்து வருகின்றோம்.

தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம் நடந்த இந்த இரண்டு ஆண்டுகளில் முதலீடுகளை ஈர்க்கும் மாநிலமாக தமிழ்நாடு முன்னேறி வந்துள்ளது.

### ஏழைகளுக்கு தருவதைக் குறை சொல்கிறார் பிரதமர்!

**கேள்வி: மக்களுக்கான நலத்திட்டங்களை வழங்கத் தொடங்கிய முன்னோடி மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று. பிரதமர் மோடி இதை 'இலவசக் கலாச்சாரம்' என்றும், 'இது பொருளாதாரத்தைப் பாதிக்கிறது' என்றும் கூறுகிறாரே?**

**மு.க.ஸ்டாலின் :** இரண்டு கேஸ் சிலிண்டர்கள் இலவசம் என்று வாக்குறுதி கொடுத்தது குஜராத் பா.ஜ.க. மூன்று கேஸ் சிலிண்டர்கள் இலவசம் என்று சொல்லி வாக்கு கேட்டது கர்நாடக பா.ஜ.க. ஆனால் பிரதமர் மோடி, இலவசங்களுக்கு எதிராகப் பேசுகிறார். இந்த மாநில பா.ஜ.க. எல்லாம் அவரது கட்டுப்பாட்டில் இல்லையா?

வறுமையும் மக்கள்தொகையும் அதிகமாக உள்ள நாட்டில் இலவசங்கள் தவிர்க்க முடியாதவை ஆகும். இதனை உச்சநீதிமன்றமே ஒப்புக் கொண்டுள்ளது.

"தேர்தலுக்கு முன்பாக அரசியல் கட்சிகள் அளிக்கும் வாக்குறுதிகளைத் தடுக்க முடியாது. ஆனால் சரியான வாக்குறுதிகள் எது, பொதுப் பணத்தைச் செலவிடுவதற்கான சரியான வழி எது என்பதுதான் எங்களது கேள்வி" என்று உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி அவர்கள் கூறியிருந்தார்.

"உழவர்களுக்கு மின்சாரம், விதைகள், உரங்களுக்கு அளிக்கப்படும் மானியத்தை இலவசமாகக் கருதமுடியுமா? இலவச சுகாதாரச் சேவைகள், இலவச குடிநீர், நுகர்வோருக்கு இலவச மின்சாரம் ஆகியவற்றையும் இலவசமாகக் கருதமுடியுமா? மக்களின் ஊதியம், வாய்ப்புகள் போன்றவற்றில் நிலவி வரும் ஏற்றத் தாழ்வுகளை ஈடுசெய்ய வேண்டும் என்று இந்திய அரசியல் சட்டமே சொல்கிறது" என்றும் நீதிபதிகள் கூறினார்கள்.

இல்லாத மக்களுக்கு உதவத்தான் அரசாங்கம் இருக்கிறது. இலவசமாக எதையும் தரமாட்டோம் என்று இருக்க முடியாது. ஏழைகளுக்குத் தருவதை குறை சொல்லும் பிரதமர் மோடி ஆட்சிக்காலத்தில்தான் கார்ப்பரேட் கம்பெனிகளுக்கு பல்லாயிரம் கோடி கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டது. இது இலவசமா? சலுகையா? உதவியா? கைம்மாறா?

### குறு, சிறு, நடுத்தரத் தொழில்! தமிழ்நாட்டுக்கு 3வது இடம்!

**கேள்வி: குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டின் வலிமைக்கு ஆதாரமாக இருந்து வருகிறது. ஆனால் கடந்த சில ஆண்டுகளாக, உலகளாவிய சூழ்நிலை மற்றும் கோவிட் பெருந்தொற்று காரணமாக இவை பாதிக்கப்பட்டிருக்கின்றன. இதை எப்படி சரிசெய்யப் போகிறீர்கள்?**

**மு.க.ஸ்டாலின்:** தொழில் துறையைப் போலவே குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டில் மீண்டெழுந்துள்ளன. இந்தியாவில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் எண்ணிக்கையில் தமிழ்நாடு 3-ஆவது இடம் வகிக்கிறது. தமிழ்நாட்டில், சுமார் 50 இலட்சம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இது நாட்டிலுள்ள மொத்த குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கையில் 7.8 விழுக்காடு ஆகும். கடந்த ஆட்சியில் MSMEதுறைக்கான நிதி ஒதுக்கீடு ரூ. 607.60 கோடி இருந்த நிலையில் எங்கள் அரசு பொறுப்பேற்ற பிறகு, 2021-22 ஆம் ஆண்டில் ரூ. 741.96 கோடியாகவும், 2022-23 ஆம் ஆண்டில் ரூ. 1025.10கோடியாகவும்இந்தநிதியாண்டான 2023-24 ஆம் ஆண்டில் ரூ. 1502.11 கோடியாக உயர்த்தி வழங்கியுள்ளோம்.

### வாக்குறுதிகளில் பெரும்பாலான்றை நிறைவேற்றியிருக்கிறோம்!

**கேள்வி: ஊதியம், ஓய்வூதியம், கடன்களுக்கான வட்டி ஆகியவற்றுக்காக 3.08 லட்சம் கோடி ரூபாய் செலவாகும் என எதிர்பார்க்கப்படுவதாக மாநில நிதிநிலை அறிக்கை கூறுகிறது. இதனால், உட்கட்டமைப்புத் திட்டங்கள் மற்றும் வளம் சேர்க்கும் திட்டங்களுக்குச் செலவிட 45,000 கோடி ரூபாய் மட்டுமே மாநில அரசிடம் எஞ்சியிருக்கிறது. இவையன்றி, 37,540 கோடி ரூபாய் வருவாய்ப் பற்றாக்குறை இருக்கிறது. இந்த நிதிநிலை நெருக்கடியைத் தவிர்க்க மாநில அரசின் எவ்வாறு திட்டமிட்டுள்ளது?**

**மு.க.ஸ்டாலின்:** மிக மோசமான நிதி நெருக்கடி காலத்தில் நாங்கள் ஆட்சிக்கு வந்தோமே தவிர, அதனைக் காரணமாகக் காட்டி எதையும் செய்யாமல் இருந்தது இல்லை.

வருவாய்ப் பற்றாக்குறையைக் குறைத்துள்ளோம். கொடுத்த வாக்குறுதிகளில் பெரும்பாலானவற்றை நிறைவேற்றிக் காட்டி இருக்கிறோம். செப்டம்பர் 15 முதல் மகளிர் உரிமைத் தொகையை வழங்கப் போகிறோம். ஒரு கோடி பெண்கள், மாதம் தோறும் ஆயிரம் ரூபாயை பெறப் போகிறார்கள்.

**கேள்வி: எதிர்க்கட்சித் தலைவர் ஸ்டாலினுக்கும் முதலமைச்சர் ஸ்டாலினுக்கும் இடையேயான வேறுபாடு என்ன?**

**மு.க.ஸ்டாலின்:** இரண்டுமே மக்கள் பணிதான். எதிர்க்கட்சித் தலைவராக வாதாடினேன். முதலமைச்சராக கையெழுத்துப் போட்டு நான் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றிக் காட்டுகிறேன்.

### கேட்டுக் கேட்டுப் புளித்துப்போன குற்றச்சாட்டுகள்!

**கேள்வி: காந்தி குடும்பத்தைக் குறிவைத்து வாரிசு அரசியல் என்று பிரதமர் மோடி விமர்சிக்கிறார். இதில் நியாயம் இருப்பதாக நீங்கள் எண்ணுகிறீர்களா?**

**மு.க.ஸ்டாலின்:** எங்களைப் பற்றி குறை சொல்வதற்கு வேறு எதுவும் இல்லாததால், வாரிசுகள் என்கிறார் பிரதமர் மோடி. இதெல்லாம் முப்பது ஆண்டுகளாக நான் கேட்டுக் கேட்டு புளித்துப் போன குற்றச்சாட்டுகள். வேறு புதிதாக எதையாவது சிந்தித்துச் சொல்லுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அப்பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.